மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 94/20
வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: பாலசுந்தரம் தேதி : 16.02.26
வயது : த/பெ :கண்ணன்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>16.02.26 குறுக்கு விசாரணை</u>

1.நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு விபரங்கள் சொன்னது காசி விஸ்வதான் என்றால் சரிதான். வாதிகளும், நானும், ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி நாகமணி வேறு சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் இடம் சம்பந்தமாக வழக்கு போட்டுள்ளார்கள். எந்த சர்வே எண்களுக்கு வழக்கு போட்டுள்ளனர் என்றால் ஞாபகம் இல்லை.

2.நான் தெய்வல்செயல்புரத்தில் பந்தல் மற்றும் மைக் செட் போடும் தொழில் செய்து வருகிறேன். நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நன்கு படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து போடுவேன். படிக்க தெரியாது. பிரமாண வாக்கு மூலத்தில் என்ன தட்டச்சு செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் இடத்தை பற்றி தெரியும். 3 ம் பிரதிவாதியுடன் நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அதன் பிறகு என்ன படித்தார் என்று தெரியாது.

3.நான் 3 ம் பிரதிவாதியுடன் ஒன்றாக படித்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புரோக்கர் வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி எந்த தேதியில் தாவா இடத்தை வாங்கி தர கோரி

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.16 10:08:57 +0530

என்னிடம் கேட்டதாக சொல்கிறேன் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. 3ம் பிரதிவாதி ஒருபோதும் என்னிடம் தாவா இடத்தை வாங்கி தர கேட்கவில்லை என்பதால் தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4.வழக்கிற்கு சொத்திற்கு பட்டா 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. பட்டா நகல் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. சர்வே எண்கள் 304/18, 304/20 வாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டின் மேல்பக்கம் ஆஸ்பட்டாஸ் சீட்டு மற்றும் ஆழ்துளை கிணறு அமைத்து வாதிகள் அனுபவம் செய்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு மற்றும் அதன் சொத்து விபரம்குறித்து தெரியாமல் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் அப்பா எனக்கு சித்தப்பா முறை.

5.நான் வாதிகளின் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.16 10:09:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.